விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 110 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 25 சனிக்கிழமை (08.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மக்கள் படும் துன்பத்தை
# குளிரூட்டி அறையை விடுத்து நேரில் வந்து பாருங்கள்
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(அம்பாந்தோட்டை)

நாட்டின் நிலைமை நன்றாக உள்ளது என்று குளிரூட்டி அறைகளில் இருந்து கொண்டு கூறும் நபர்களிடம் நாட்டின் உண்மை நிலையை அறிய குளிரூட்டி அறையை விட்டு வெளியேறி கிராமம் தோறும் மூலை முடுக்குகளுக்குச்

11

# கட்டணம் அதிகரித்தும் மின் பாவனை குறையவில்லை
## எரிசக்தி அமைச்சர் கஞ்சன

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட போதிலும்மின் பாவனையில் குறையவில்லை என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் சிஸ்டம் கட்டுப்பாட்டு அலகின் தரவு விளக்கப் படத்தை முன்வைத்த அவர், மார்ச் மாதத்திற்கான சராசரி மின்சார உற்பத்தி 44.22 ஜிகா வாட் மணிநேரம் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

மின்சாரக் கட்

11

## யாழில் இன்று முதல்
# பால் தேநீர், பரோட்டா விலைகள் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இன்று சனிக்கிழமை முதல் தேநீர், பால் தேநீர், பரோட்டா ஆகியவற்றின் விற்பனை விலையில் இருந்து 10 ரூபாய் விலை குறைத்து விற்க உணவக உரிமையாளர்களால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

11


## திருமலையில் 200 வருட பழைமையான
# பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை
## படைகளின் பிரசன்னத்துடன் குடியேறும் புத்தர்

(திருகோணமலை)

திருகோணமலையில் 200 வருட பழைமையான பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவம் மற்றும் கடற்படை உதவியுடன் விகாரை நிறுவப்பட்டுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)



## போதை மாத்திரைகளுடன்
# உடுவிலில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

உடுவிலில் 36 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுன்னாகம் ஆலடி பகுதியில் சுன்னாக பொலிஸாருடன் இணைந்து நடாத்திய தேடுதல் நடவடிக்கையின்போது

11



# இலங்கையிலுள்ள இந்துக்களுக்கு நீதிகோரி டில்லியில் போராட்டம்




05

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சிறுபான்மையினரை இலக்கு வைக்கலாம்
## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் கொண்டு வரவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சிறுபான்மையினரை இலக்கு வைக்கலாம் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் சட்டமூலத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேசமனித உரிமை கண்காணிப்பகம் எந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் சர்வதேச தராதரங்களை பேணுவதை கலந்தாய்வு மூலம் இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய

11

## பயங்கரவாத நடவடிக்கையால்
# 75 வருடங்களாக நாடு முன்னோக்கி பயணிக்கவில்லை
## சாகர காரியவசம் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாகவே எமது நாடு 75 வருடங்களாக முன்னோக்கி பய்ணிக்க முடியாதுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பி

11

## கொழும்பிலிருந்து யாழுக்கு
# நேரடி ரயில் சேவை
## 2024 ஜனவரி மீள ஆரம்பிக்கப்படும்

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் - காங்கேசன்துறைக்கான நேரடி ரயில் சேவை 2024ஆம் ஆண்டு ஜனவரியிலேயே மீள ஆரம்பிக்கப்படும் என ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் இந்திபொலகே தெரிவித்தார்.

வடக்கு ரயில் மார்க்கத்தின் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையில்

11

## அமைச்சரவையில்
# மாற்றங்கள் இடம்பெறாது

(கொழும்பு)


அரசாங்கம் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களுக்கே முன்னுரிமையளித்து வருகிறது.

அமைச்சரவையில் எவ்வித மாற்றங்களும் இடம் பெறாது என ஊடக

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம்
28 - 10 - 1949

மறைவு
05 - 04 - 2023

### வேலுப்பிள்ளை விவேகானந்தன்
**(ஒலி, ஒளி அமைப்பாளர்)**

புலோலி தெற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலுப்பிள்ளை விவேகானந்தன் அவர்கள் (05.04.2023) புதன்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பாய்க்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வசந்தராணி அவர்களின் அன்புக் கணவரும் வஷ்னிதா (பிரான்ஸ்), காலஞ்சென்ற லிசான் மற்றும் அர்ச்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வாகீசன் (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற புஸ்பலீலா மற்றும் புஸ்பராணி, காலஞ்சென்ற புஸ்பராஜா மற்றும் புஸ்பரஜனி, புஸ்பவதனா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் கமலாகரன், விஜயகலா, ரவீந்திரன், சுரேஷ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அர்வின், அவினாஷ், அப்சரஷ் (பிரான்ஸ்), கிஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை 09.04.2023 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
077 387 0116

(C-6317)

## சுந்தரம் டிவகலாலாவின் நினைவு தினம் இன்று

(யாழ்ப்பாணம்)



அமரர் சுந்தரம் டிவகலாலா அவர்களின் நிளைவுவேந்தல் நிகழ்வானது இன்று சனிக்கிழமை மு.ப 9.30 தொடக்கம் பி.ப 12.30 வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு நினைவு தின ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-7.9)


## பதவி வெற்றிடம்

- ஒப்பு நோக்குநர் (பெண்கள்)
- தமிழ் ரைப்பிங் மற்றும் கணனி பக்க வடிவமைப்பு அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் (பெண்கள்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)

**தகைமை :** க.பொ.த உயர் தரம் கற்றிருத்தல்
வயது - 24 இற்கு மேல்

**குறிப்பு :** ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.


மேலதிக தொடர்புகளுக்கு

**076 097 3121**


## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சின்னத்தம்பி
**(கச்சாய் கண்ணகி அம்மன் ஆலய போசகர்)**
**(சின்னமேளக் குஞ்சையா)**

**தோற்றம் : 25.07.1930 மறைவு : 07.04.2023**



யாழ். கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சின்னத்தம்பி அவர்கள் நேற்று (07.04.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செங்கமலம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ராசம்மா, பாறுப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பையாவின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மனோன்மணி, ராசமலர் மற்றும் ராசரகுபதி, சிவபாலன், சிறிக்குணராசா, ராசபூபதி, ராஜேஸ்வரி, சிறிதரன், சிறிக்குமார், ராஜலோசினி, சிறிலதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா, மகேஸ்வரன், பத்மநாதன், ஜெயஸ்ரீ, சிவசோதி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் ரவீந்திரன், ஜெயமனோகரி, இலங்கேஸ்வரி, சிவச்செல்வன், தயாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நமசிவாயம், செல்லத்துரை, பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை 09.04.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 788 8070

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

(C-6319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து

## திருமதி. இராஜேஸ்வரி தயாநந்தன் 08.04.2023

### வலயக்கல்விப் பணிப்பாளரின் மணிவிழா வாழ்த்து

திருமதி.இராஜேஸ்வரி தாயநந்தன் ஆசிரியர் அவர்கள் 09.03.1990 முதல் இன்று வரை ஆசிரியர் சேவையில் மாணவச் செல்வங்களுக்கு அர்ப்பணிப்புடன் சிறப்பாக சமூக விஞ்ஞானப் பாடங்களைக் கற்பித்து அகவை அறுபதைப் பூர்த்தி செய்து 08.04.2023 இன்று முதல் ஓய்வு பெறும் தங்களது ஓய்வுக்காலம் நலமாக அமைய வாழ்த்துகின்றேன்.

பகவத் கீதையில் கிருஷ்ணர் கூறியதைப் போன்று "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற கூற்றிற்கிணங்க அவர் தம் பணியில் தன்னலம் கருதாது ஆசிரியர் சேவையில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்பட்டு கல்லூரிக்கும் யாழ்.வலயத்திற்கும் பெருமை சேர்ப்பித்த ஆசிரியருமாவார்.

தன்னலங் கருதாது ஆற்றிய பணியில் தங்களது ஓய்வுக்காலத்தை குடும்பத்துடன் மனநிறைவோடும், மகிழ்வோடும் களித்தின்புற வாழ்த்துகிறேன். உங்களால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் வளர்ந்து சமூகத்தில் ஆல விருட்சத்தைப் போன்று இருப்பதைக் கண்டு தங்கள் உள்ளம் அகமகிழ்வெய்துவதுடன் தங்கள் சேவையால் கல்லூரியும், யாழ்.வலயமும் பெருமையடைகின்றது. மன அமைதியுடன் எல்லா நலன்களும் பெற்று நீண்ட காலம் குடும்பத்துடன் மகிழ்வுடன் வாழ்ந்து மேலும் பொதுவாழ்வில் அர்ப்பணிப்புடன் ஈடுபட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**மு.இராதாகிருஸ்ணன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**

### அதிபரின் வாழ்த்துச்செய்தி

திருமதி. இராஜேஸ்வரி தயாநந்தன் எமது பாடசாலையின் மாணவியாக, ஆசிரியராக, பகுதித் தலைவராக பணிபுரிந்து 08.04.2023 இன்று தனது சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். 09.03.1990 அன்று யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலையில் ஆசிரியராக தனது பணியினை ஆரம்பித்தார். கடந்த 33 வருட கால ஆசிரிய சேவையில் எமது பாடசாலையில் 20 வருடங்கள் பணிபுரிந்துள்ளார். வரலாறு, புவியியல் பாடங்களை மாணவர்களிற்கு இலகுவாகக் கற்பித்து சித்தி வீதத்தை அதிகரிப்பதற்கு பெரும்பங்காற்றியுள்ளார். சமூக விஞ்ஞானப் பாட இணைப்பாளராவும், ஒழுக்காற்று குழுவின் பொறுப்பாசிரியராகவும், இணைப்பாட செயற்பாடுகளில் முதன்மையான பங்காற்றும் ஆசிரியராக தனது சேவைக் காலத்தில் பணிபுரிந்தார்.


களச்சுற்றுலா, வெளிமாவட்ட விளையாட்டுப் போட்டிக்காக மாணவர்களை அழைத்துச் செல்வதில் தானாகவே முன்வந்து பணியாற்றியமை மாணவர் மீதான பிணைப்பினை உருவாக்கியதுடன் பாடசாலை யின் எந்தவொரு செயற்பாடாக இருந்தாலும் தயாநந்தன் ஆசிரியர் பெயர் உச்சரிக்கப்பட்டு வந்துள்ளது. மாணவர் களின் சமூக ஒழுக்க விழுமியம் சார்ந்த செயற்பாடுகளில் அதீத ஈடுபாடு காட்டியதுடன் அவர்களை நல்வழிப்படுத் திய முதன்மை ஆசிரியராக திகழ்ந்தார். அவர் தம் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்.

**அதிபர்,**
**ம.ஞானசம்பந்தன்,**
**யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.**

### பிரதம குருக்களின் ஆசிச்செய்தி

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களை சிறப்பாக கற்பித்து மாணவர்களை நல்வழிப்படுத்திய மணிவிழா நாயகி திருமதி. இராஜேஸ்வரி தயாநந்தன் ஆசிரியர் இப்பாடசாலையில் இருபது வருடங்களாக பணியாற்றி 08.04.2023 இன்று ஓய்வுபெறும் ஆசிரியரின் பணி ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளின் அருள்புரிய வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**பிரதம குரு,**
**திரு.க.சிவதாஸக் குருக்கள்.**



### சேவை விபரம்

**யா/புனித மரியாள் பெண்கள் பாடசாலை**
**ஊர்காவற்றுறை**
**09.03.1990 - 31.08.1995**

**யா/சிறிபுஸ்பம் மகளீர் வித்தியாலயம்**
**09.09.1995 - 25.07.1998**

**யா/இளையதம்பி வித்தியாசாலை**
**26.07.1998 - 28.02.2002**

**யா/கொக்குவில் இந்துக்கல்லூரி**
**01.03.2002 - 02.01.2011**

**யா/ஸ்ரீஞான பண்டித வித்தியாலயம்**
**03.01.2011-15.01.2012**

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**
**16.01.2012-08.04.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் அகவை அறுபதில் வாழ்த்து

வளம் பொருந்திய வடமாகாணத்தின் கொக்குவில் பதிதன்னில் உதித்த பாவாய் கொக்குவில் இந்துக் கல்லூரியில் தங்கள் கால்தடம் பதியாத இடமே இல்லை.

மாணவியாக, ஆசிரியராக, பகுதித் தலைவராக கடமையாற்றினீர். "தோன்றிப் புகழொடு தோன்றுக அன்றில்..." என்னும் வாக்கிற்கிணங்க மாணவர்கள் மத்தியில் அழியாப் புகழ் பெற்று வலம் வரும் மணிவிழா நாயகியே நீர். ஆசிரியர்களுடன் அன்பாகவும், பண்பாகவும், கண்ணியமாகவும், பழகும் அற்புதமான குணம் படைத்த நாயகியே நீங்கள் நீடூழி வாழ்க.

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும், முகாமைத்துவச் செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்து கல்லூரிக்கு பெருமை சேர்த்து 08.04.2023 இன்று பணி ஓய்வை எய்தும் ஆசிரியப் பெருந்தகையின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமிகளின் திருவருள் கிடைக்க மனதால் வேண்டி அவரும் அவரது குடும்பத்தினரும் நலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

### வாழ்த்துப் பாமாலை

வானுற எழுந்தே வளர் இளம் கதிராய்
வையம் யாவிலும் நின்புகழ் பரவிட
தானுற எழுந்த தகைசால் அறிவால்
வரலாறு தன்னில் வரலாறும் நீரே.
கானுற விளைந்த கனியின் சுவையைக்
கனிவுடை நின்மொழி கண்டவர் நாமே
தேனுறு மலராள் கலைமகள் போலே
தேவதை எங்கள் இராஜேஷ்வரியே
ஊனுற உள்ளம் மகிழ்ந்திட வாழ்த்தினோம்
உலகம் உள்ளளவும் வாழ்க பல்லாண்டே!

கற்றல் பணியொடு கவினுறு மாணவர்
கலைகள் யாவிலும் மேன்மைகள் கண்டிட
உற்ற துணையாய் உவப்புடன் நின்றே
ஒழுக்கம் உயர்வினை ஈன்றாய் நன்றே
பெற்ற தாயினும் அன்பினைப் பேணி
பிள்ளைகள் தம்மை அணைத்திடும் தாயே
வற்றிடா நின்பணிச் சேவை நயப்பால்
வளம்பல கண்ட மாணவர் பலரே
நற்றவம் செய்தோம் உம்முடன் பணிசெய்ய
நாளும் நலமுடன் வாழ்க பல்லாண்டே!

மொழித்திறன் போட்டி நிகழ்வுகள் ஆயினும்
முதன்மை இல்ல மெய்வன்மை ஆயினும்
விழிப்புடன் நின்றே பெற்ற வெற்றியை
விருந்தாய் நமக்கு அளித்தவர் நீரே
வழிகாட்டும் உயரிய நேர்மைத் திறனால்
வாண்மைக் கலங்கரை விளக்குமானாய்
பழியொரு வார்த்தை நின் பேச்சினில் அறியோம்
பண்பே உமது மூச்சென அறிவோம்
செழித்த நல் அறிவின் பெருந்தகை நீரே
சிறப்புடன் நாளும் வாழ்க பல்லாண்டே!

அதிகாலைக் கதிரில் கரையும் பனிபோல்
அத்தனை துயரமும் மறந்திடச் செய்வாய்
நதியாய் நகரும் நின் உற்சாகமதனால்
நாமும் கலந்தே நாளும் மகிழ்ந்தோம்
புதிதாய் மலரும் பூவிதழ் போலே
புன்னகை மாறா நின்னெழில் முகமும்
மதியின் கூர்மையும் மாசறு உள்ளமும்
மானிலம் எங்கணும் தேடினும் உண்டோ?
பதியில் நல்லான் தயாநந்தனோடும்
பாரில் என்றும் வாழ்க பல்லாண்டே!

# குஜராத் அணி குழாமில் இணைந்த தசுன் சானக்கா

நடப்பு ஐ.பி.எல் தொடரின் முதல் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் குஜராத் டைட்டன்ஸ் அணியும் மோதின.

கடந்த 31 ஆம் திகதி நடைபெற்ற இந்த போட்டியில் குஜராத் அணி வீரர் கேன் வில்லியம்சனுக்கு காயம் ஏற்பட்டது.

எல்லைக் கோட்டிற்கு அருகே வந்த கேட்சை பிடிக்க முற்பட்டபோது அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. இதன் காரணமாக அவர் நடப்பு ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகியுள்ளதாக குஜராத் அணி நிர்வாகம் தெரிவித்தது.




இந்த நிலையில், காயம் காரணமாக குஜராத் அணியில் இருந்து வெளியேறிய வில்லியம்சனுக்கு பதிலாக இலங்கை வீரர் சானக்கா சேர்க்கப்பட்டு உள்ளார். (6)

# இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தில் ஊழல் மோசடிகள்-விசாரணைக்குழு அறிக்கை

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தில் 2014 இல் இருந்து நிதி, நிர்வாகம், போட்டி செலவினங்கள் ஆகியவற்றில் 30 இற்கும் மேற்பட்ட ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த மோசடிகளில் குற்றவாளிகளாக காணப்படும் நிர்வாகிகள் எவரும் எதிர்காலத்தில் சம்மேளனத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படமாட்டார்கள் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் யாப்பு விதிகள், நிர்வாகம், நிதி, கால் பந்தாட்ட விளையாட்டின் நிலை உட்பட மற்றும் சில விடயங்கள் தொடர்பாக ஆராய விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஒரு மாதத்திற்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட விசாரணைக் குழுவின் அறிக்கை விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரண சிங்கவிடம் கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கையளிக்கப் பட்டது.

இதன்போது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (6)

# அயர்லாந்துடனான ஒரே ஒரு டெஸ்ட் கிண்ணம் வென்றது பங்களாதேஷ்



பங்களாதேசம்-அயர்லாந்து அணிகள் இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மிர்புரில் நடந்து வருகிறது. இதில் முதல் இன்னிங்சில் முறையே அயர்லாந்து 214 ரன்களும், பங்களாதேசம் 369 ரன்களும் எடுத்தன. 155 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை தொடங்கிய அயர்லாந்து 2-வது நாள் முடிவில் 4 விக்கெட்டுக்கு 27 ரன்களுடன் ஊசலாடியது. 3-வது நாளான நேற்று முன்தினம் அயர்லாந்தின் பட்டிங் வியப்பூட்டியது.

அறிமுக வீரரும், விக்கெட் கீப்பருமான லோர்கன் டக்கெர் சதம் அடித்து அசத்தினார். டெஸ்டில் சதம் விளாசிய 2-வது அயர்லாந்து வீரர் என்ற பெருமையை பெற்ற டக்கெர் 108 ரன்களில் (162 பந்து, 14 பவுண்டரி, ஒரு சிக்சர்) கேட்ச் ஆனார்.

அவருக்கு ஹாரி டெக்டர் (56 ரன்), ஆன்டி மெக்பிரின் (71 ரன், நாட்-அவுட்) நன்கு ஒத்துழைப்பு தந்தால் அயர்லாந்து சரிவில் இருந்து வலுவாக மீண்டெழுந்தது. அன்றைய நாள் முடிவில் அயர்லாந்து 2-வது இன்னிங்சில் 107 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 286 ரன்கள் சேர்த்து மொத்தம் 137 ரன்கள் முன்னிலை பெற்றது.

138 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தமது 2 இனிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 27.1 ஓவரில் 3 விக்கெட்டுகளை இழந்து 138 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வங்காள தேசம் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக முஷ்பிகுர் ரஹீம் தேர்வு செய்யப்பட்டார்.




விதுசன்

ஓயின் சாப்புக்கு போன ஆணும் பிறந்த வீட்டுக்கு போன பெண்ணும்



புலம்பாம திரும்பி வந்ததா சரித்திரம் இல்லை

துஷிந்தா

அண்ணே எனக்கு ஒரு சந்தேகம்





1 டன் உள்ள அவ்வளவு பெரிய யானைக்கே வெறும் 4 கால் தான் 1 கிராம் இல்லாத இந்த சிலந்திக்கு மட்டும் எதுக்க 8 கால் இது என்ன நியாயம்

சுஜீபன்

பெற்றோர் இறந்த பிறகு விமானத்தில் வந்து பால் ஊற்றும் பிள்ளையை விட இருக்கும் பொழுது பக்கத்தில் இருந்து கஞ்சி ஊற்றிய பிள்ளையே மேல்...

விதுணன்




காலம் மாறிவிட்டது காலத்திற்கு ஏற்ப நம்மை நாமும் மாற்றிக் கொள்வதே சிறப்பு

தார்மீகன்

சாட்சிகள் இல்லை
என்று துள்ளாதே...
இரண்டு சாட்சிகள் இருக்கின்றது...
ஒன்று இறை சாட்சி...
மற்றொன்று
மனசாட்சி...
மனசாட்சி இப்போது
பேசாது....
நாளை நீ படுத்த
படுக்கையாக இருக்கும்
போது பக்குவமாக
பேசும்

ஜெறின்சலா



மற்றவர்களின் நடத்தையை உங்களால் கட்டுப்படுத்த முடியாது ஆனால் அதற்கு எப்படிப் பதில் வழங்க வேண்டும் என்பதை உங்களால் தீர்மானிக்க முடியும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள், அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்து ஆலயங்கள் அழிப்பிற்கு எதிராக டில்லியில் போராட்டம்

(டில்லி)

**இலங்கைத் தமிழ் இந்துக்களுக்கு நீதி கோரி டில்லியில் இந்து அமைப்புகள் போராட்டம் ஒன்றினை கடந்த புதன்கிழமை முன்னெடுத்திருந்தன.**




இதில் ஆலயங்கள் இடிக்கப்படுவது மற்றும் இந்துக்களுக்கு தீங்கு இழைக்கப்படுவது ஒரு கலாசார இனப்படுகொலை எனவும் இந்து அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையில் கட்டுமானப் பணிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் என்ற பெயரில் பழங்கால கோயில்கள் அரசால் தொடர்ந்து இடித்துத் தள்ளப்பட்டு வருகின்றன. பழங்கால வரலாற்று மற்றும் சமய முக்கியத்துவம் வாய்ந்த இந்த கோவில்களை அரசு இடித்து அழித்து வருவது இந்து தமிழ் சமூகத்தின் கலாசார இனப்படுகொலையை இலங்கை அரசு செய்து வருவதாக தெரிகிறது. இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கு விஜயம் செய்ய தீர்மானித்துள்ள நிலையில் இந்த விடயம் தொடர்பில் உலகெங்கிலும் உள்ள இந்து அமைப்புகள் மத்தியில் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய அரசு தொல்லியல் ஆய்வு வளர்ச்சி மற்றும் உற்பத்தி பணிகள் என்ற பெயரில் கோவில்களின் தோற்றத்தை கெடுத்து அவற்றை இடிப்பது சகிக்க முடியாத குற்றமாக கருதப்படுகிறது.

இந்துப் போராட்டக் குழுவின் சர்வதேசத் தலைவர் ஸ்ரீஅருண் உபாத்யாய், இது இந்துக்களுக்கும் இந்தியாவுக்கும் எதிரான தீங்கிழைக்கும் செயல் என்று வன்மையாகக் கண்டித்துள்ளார். மேலும், இந்திய அரசும் இந்தப் பிரச்சினையை உணர்ந்து இந்தியா வரவிருக்கும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடுமையாக ஆட்சேபிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# புகையிரதம் தடம்புரண்டதில் 17 பேருக்கு காயம்

(கொழும்பு)

கந்தளாய் - அக்போபுர புகையிரத நிலையத்திற்கு அருகில் புகையிரம் தடம் புரண்டதில் 17 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. புகையிரதம் தடம்புரண்டதில் இரண்டு புகையிரத கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் 15 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கந்தளாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

# விவசாயத்துறையின் அதிகாரிகள் நீண்ட நாட்களுக்கு வெளிநாடு செல்ல முடியாது-மகிந்த அமரவீர

(கொழும்பு)

விவசாயத் துறையின் அனைத்து அதிகாரிகளுக்கு நீண்டகாலத்திற்கு வெளிநாடு செல்வதற்கான அனுமதியை வழங்குவதில்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தீர்மானித்துள்ளார்.

விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம், விவசாய அபிவிருத்தி திணைக்களம் உள்ளிட்ட அனைத்து மாகாண விவசாய நிறுவனங்களிலும் பணிபுரியும் அதிகாரிகள் இந்த தீர்மானத்திற்கு உட்பட்டவர்கள் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் நீண்ட காலம் வெளிநாடுகளுக்குச் சென்றால் அது நாட்டின் விவசாயத் துறையை வீழ்ச்சியடையச் செய்யும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# லங்கா ஐ.ஓ.சியின் 26 எரிபொருள் நிலையங்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

லங்கா ஐ.ஓ.சிக்கு சொந்தமான 26 எரிபொருள் நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கியூ.ஆர் ஒதுக்கீட்டை தொடர்ந்து கடைப்பிடிக்காத எரிபொருள் நிலையங்களுக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

# அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் தான் இலங்கை உள்ளது - கப்ரால்

(கொழும்பு)

அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இலங்கை உள்ளதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசியலையும் அமெரிக்கா முன்னெடுக்கிறது.

மத்திய வங்கி ஆளுநரும் நாட்டின் தலைவர்களும் கவனத்துடன் செயற்பட வேண்டும் என கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே முன்னாள் ஆளுநர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த ஒன்பது வருடங்களாக இந்த வேலையை நான் செய்தேன். நான் எப்போதாவது ஒரு நாள் புகார் செய்திருக்கிறேனா அல்லது அழுதிருக்கிறேனா? போரையும் மீறி நாங்கள் எங்கள் பணியை செய்தோம்.

அதுதான் மத்திய வங்கி ஆளுநருக்கும் நாட்டின் தலைவர்களுக்கும் தேவை.

இனி எங்களிடமோ அல்லது இந்த நாட்டின் தலைவரிடமோ பேசுவதில் அர்த்தமில்லை. எல்லாமே அமெரிக்கா தான் எனத் தெரிவித்துள்ளார். (நி)

# நிலக்கரியுடன் 23 கப்பல்கள்

(கொழும்பு)

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்துக்குத் தேவையான நிலக்கரியுடன் 23 கப்பல்கள் இலங்கை வந்துள்ளதாக அனல்மின் நிலைய முகாமையாளர் நாலக விஜேகோன் தெரிவித்தார்.

மேலும் மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி இருப்பில் தற்போது சுமார் மூன்று இலட்சத்து எண்பதாயிரம் மெற்றிக் தொன் நிலக்கரி கையிருப்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

08.04.2023
பங்குனி 25, சனிக்கிழமை
துதியை முற்பகல் - 10.36 மணிவரை
சுவாதி பிற்பகல்- 2.19 மணிவரை

சுபநேரம் -3.07-4.37 மணிவரை
இராகுகாலம்-09.07-10.37 மணிவரை
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம் - ரேவதி, அச்சுவினி

வளவன்




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலன் சீராகும், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உறவினர் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.




பயணங்களால் பலனுண்டு, தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பேச்சில் நன்மையுண்டு.




தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், ஆடம்பரப் பொருட்கள் மீது பிரியம் கூடும்.




நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தொலைபேசி வழித் தகவல் மனக் குழப்பத்தை அகற்றும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.




வரவும் செலவும் சமமாகும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், வேலைச்சுமை கூடும், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

விட்டுக்கொடுக்காதவர்கள் தங்களையே இழந்து விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயம் தனியார் மயமாவதை அனுமதிக்க முடியாது

## இரணைமடு விவசாய சம்மேளனம்

(முறிகண்டி)

**கம்பனிகளிற்குள் அடிமையாகி மீளவும் சுதந்திர போர் ஒன்றில் ஈடுபடுமளவிற்கு இந்த மக்கள் தள்ளப்படலாம் என இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

எதிர்வரும் காலபோகத்திற்கான உரம் உள்ளிட்ட உள்ளீடுகள் வழங்குதலை தனியாரிடம் கையளிப்பது தொடர்பில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரணைமடு நீர்ப்பாய்ச்சல் திட்டத்தின் கீழ் சிறுபோக செய்கைக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற இந்த வேளையிலே விவசாய அமைச்சர் சில தகவல்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்.

அந்த வகையில், காலபோகத்திற்கான உள்ளீடு விடயங்களை தனியார்மயமாக்கி அவர்கள் ஊடாகவே விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் உள்ளதாக தகவல்களை வெளியிட்டிருக்கின்றார்.

உண்மையில் இந்த சிறுபோக பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான உள்ளீடுகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் முழுமையடையாத நிலையில், கடந்த வருடம் அறுவடை செய்த நெல்லைக் கூட நியாயமான விலையில் விற்க முடியாத நிலையில் உள்ளது.

அவ்வாறான தளம்பல் நிலைக்குள் தனியார் நிறுவனங்கள் எங்களிடமிருந்து உள்ளீடுகளை கொள்வனவு செய்தாலோ அல்லது எங்களுடைய உற்பத்தி பொருட்களை அவர்கள் கொள்வனவு செய்தாலோ, எந்தவொரு நிதானமற்ற விலை நடைமுறைகளாலும் ஏகபோக தன்மையுடன் விவசாய சமூகத்தை பாதிப்படைய செய்யும் செயற்பாடுகள் நடைபெறும்.

இவ்வாறான சூழலில் இலங்கை தனது கொள்கையாக தனியார் மயப்படுத்தலிற்குள் இறங்கிக்கொண்டிருக்கின்ற இந்த வேளையிலே, கடந்த முன்னாள் ஜனாதிபதி, விவசாயிகள் மற்றும் விவசாயத்தின் மீதான மேலெழுந்தவாரியான தீர்மானங்களை எடுத்ததன் காரணமாக இன்று அவர் பதவியை விட்டு விலகிய நிலையில் இருக்கின்றார்.

தற்போதுள்ள அரசும் அனைத்தையும் தனியார் மயப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறது.

தனியார் கம்பனிகளிடம் எங்களுடைய அனைத்து பொறுப்புக்களையும் அரசு ஒப்படைக்குமாக இருந்தால், உள்ளீடுகளை மட்டுமல்ல எங்களுடைய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்குக்கூட அவர்களே தீர்மானிப்பார்கள். அதுமாத்திரமன்றி, இந்த நாட்டில் எவ்வளவு உற்பத்தி விளைய வேண்டும் என்பதையும் இதே தனியார் தான் நிர்ணயிக்கப் போகின்றார்கள். எங்கள் உற்பத்தியின் விலையை அவர்களே நிர்ணயிக்கப் போகின்றார்கள். உற்பத்தியானது நுகர்வோர் சந்தைக்கு செல்கின்றபோது அதனையும் அவர்களே நிர்ணயிக்கப் போகின்றார்கள்.

இவ்வாறு அனைத்தையும் தனியார்களே நிர்ணயிப்பார்களாக இருந்தால், எதிர்காலத்தில் எமது காணிகளும் கம்பனிகளிடமே சென்றடையும் சூழல் உருவாகும். அவ்வாறு உருவாகின்றபொழுது, இதே உற்பத்தியாளர்கள் அந்த கம்பனிகளிடம் பணியாற்றும் நிலையும் உருவாகும்.

இது 14 ஆம் 15 ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கம்பனிகள் எவ்வாறு நாட்டுக்குள் வந்து பின்னாட்களில் அந்த கம்பனிகளின் ஆதிக்கம், 400 ஆண்டுகளிற்கு மேல் எம்மை ஆண்டு அடிமைப்படுத்தி சென்றது போன்ற ஒரு சூழலை இதே கம்பனிகள் இதே மண்ணில் ஏற்படுத்தும் என்றும் சிந்திக்க வேண்டும்.

இந்த தனியார்மயமாக்கலை மிக மிக நிதானமாக இந்த அரசு கையாளாவிட்டால் எதிர் காலத்தில் இந்த நாடு கேள்விக்குறியாக மாறும் என தெரிவித்தார். (4-6-100)

# ரவீந்திரனிற்கு மணிவிழா

(யாழ்ப்பாணம்)

வாழ்வக நிறுவனத்தின் வாழ்நாள் தலைவரும் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுபெற்ற விரிவுரையாளருமான ஆறுமுகம் ரவீந்திரனின் மணிவிழா சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக செல்வா மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வாழ்வக நிர்வாக சபை உறுப்பினர் பொ.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)


# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீட விரிவுரையாளர் அ.பௌநந்தி எழுதிய 'வளர் நிலா' என்ற சிறுவர் பாடல் நூல் மற்றும் பெண் கவிஞர்கள் பற்றிய 'இன்னபடி முரண் நிலை' என்ற நூல் ஆகியவற்றின் வெளியீட்டு நிகழ்வு இன்று மாலை 3.30 மணிக்கு கரவெட்டி கோவில் கடவை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் விசாக ரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை ஜீவநதி ஆசிரியர் க. பரணீதரனும் நூலின் மதிப்பீட்டுரைகளை விரிவுரையாளர் த.அஜந்தகுமார் மற்றும் விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆகியோரும் நிகழ்த்துவர். (4-6-33)

# லொறியில் கால்நடைகளை மறைத்து கடத்திய இருவர் கைது



(சாவகச்சேரி)

கிளிநொச்சிப் மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு லொறி வாகனத்தில் கால்நடைகளை கடத்திய இருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து கொடிகாமம் கச்சாய் வீதி ஊடாக சாவகச்சேரிக்குள் நுழைய முற்பட்ட வேளையில் சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனையின் போது குறித்த கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது லொறியில் மறைத்து கடத்திச் செல்லப்பட்ட 12 மாடுகள் மற்றும் 11 ஆடுகளை பொலிஸார் பாதுகாப்பாக மீட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே குறித்த அதிரடி நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். (4-6-30)

# கரப்பந்தாட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் - 2023 இன்று மற்றும் நாளை காலை 9 மணிக்கு புத்தூர் கலைமதி மைதானத்தில் வடமாகாண தமிழர் விளையாட்டுக்கழக இணைப்பாளர் ந.சுதேஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)




யாழ்.மருத்துவ பீடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஒருங்கிணைப்பில் சிங்கப்பூரில் இருந்து வருகை தந்திருந்த Duke - National University of Singapore மருத்துவ பீட மாணவர்களுக்கு ஒருவார காலப் பயிற்சி வழங்கப்படுகிறது. விரிவுரையாளர்கள் மற்றும் யாழ். மருத்துவ பீட மாணவர்களின் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் சில சேவைகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

(படம்: சிவசாந்தன்)

# மனவளக்கலைப் பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ். அறிவுத்திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பாடசாலை விடுமுறைக் காலத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளது என்பதுடன் மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மூலம் சிறுபான்மையினரை அரசாங்கம் இலக்கு வைக்கலாம்

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அடிப்படை உரிமைகளை திட்டமிட்ட முறையில் மீறுவதற்கான வலுவை அதிகாரிகளிற்கு வழங்கும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் சட்டமூலத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம். எந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் சர்வதேச தராதரங்களை பேணுவதை கலந்தாய்வு மூலம் இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது. தற்போதைய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கண்டனங்கள் எழுந்ததை தொடந்து அர சாங்கம் முன்னேற்றகர ான சட்டத்தை கொண்டுவருவதாக உறுதியளித்தது.

ஆனால் இந்த பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு பதில் உத்தேச பயங்கரவாத தடைச் சட்டமூலம் பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணத்தை அதிகரித்துள்ளது. ஒன்றுகூடல். கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றிற்கான உரிமைகளை கட்டுப்படுத்துகின்றது. அத்துடன் உத்தேச பயங்க ரவாத எதிர்ப்புச் சட்டம் அமை தியான விதத்தில் தன்னை விமர் சிப்பவர்களையும் சிறுபான்மை சமூகத்தவர்களையும் இலக்கு வைப்பதறகான கடுமையான சட்டங்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கும்.

உடன்பட மறுப்பவர்கள் மீதான அரசாங்கத்தின் ஒடுக்குமுறையும் ஆர்ப்பாட்டக்காரர்களை தடுத்து வைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தற்போதைய பயங்கரவாத தடை சட்டத்தை தவறாக பயன்படுத்துவதும் உத்தேச சட்டம் மூலத்தில் உள்ள ஆபத்தை வெளிச்சம் போட்டு காட்டுகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசியாவிற்கான இயக்குநர் மீனாட்ஷி கங்குலி தெரிவித்துள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 160 | 280 |
| உருளைக்கிழங்கு | 150 | 170 | 140 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 350 |
| தக்காளி | 100 | 80 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 150 | 200 |
| கோவா | 100 | 140 | 100 | 150 |
| கரட் | 120 | 180 | 140 | 200 |
| பூசணி | 60 | 70 | 60 | 50 |
| புடோல் | 140 | 140 | 140 | 160 |
| வாழைக்காய் | 150 | 150 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 100 | 120 |
| பாகற்காய் | 400 | 400 | 300 | 300 |
| வெண்டக்காய் | 350 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 250 | 300 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 240 | 300 | 300 |
| பீற்றூட் | 160 | 120 | 150 | 150 |
| கறிமிளகாய் | 350 | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 600 | 1200 |
| போஞ்சி | 250 | 250 | 250 | 280 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | 160 | 250 |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 300 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 80-120 |
| இராசவள்ளி | 200 | 250. | 280 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 150 | -- | 480 |
| முள்ளங்கி | 50 | 100 | -- | 160 |
| பொன்னாங்காணி | 60 | 120 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | -- | 160 |

### உயர்தரப் பரீட்சை விடைத்தாள்

# மதிப்பீட்டுப் பணிகள் 50 நாட்களாக தாமதம்

## பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது சுமார் 50 நாட்களாக தாமதமடைந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் முன்வராமையே இதற்கு காரணமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் கலந்துகொள்வது தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இதுவரை தமக்கு அறிவிக்கவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். மதிப்பீட்டு பணிகளுக்காக சுமார் 5000 ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியம்.

இவ்வாறான பின்புலத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் தாமதமடைந்துள்ளமையினால், சாதாரண தரப் பரீட்சையை திட்டமிட்ட தினத்தில் நடத்துவதிலும் சிக்கல் நிலைமை காணப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)


வாடிக்கையாளர்களின் வசதி மற்றும் நலன் கருதி

332,1/3 பிரதான வீதி, பருத்தித்துறை.

LIC கிளை 187, பிரதான வீதி, நெல்லியடிக்கு

இடம் மாற்றப்பட்டு வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்படுகிறது

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலம்: 08.04.2023

சனிக்கிழமை

நேரம்: 10.30 a.m

நன்றி




077 711 7606,

021 226 0220

LIC

(சி-6311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 148





பேச முடியாத நிலையை அவள் அச்சமயம் அடைந்திருந்தது வந்தியத்தேவனுக்கு அனுகூலமாகப் போயிற்று.

இலேசாக அவன் ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு, "அம்மணி! தங்கள் தாதிப் பெண்ணுக்குத் திடீரென்று சந்தேகம் வந்து விட்டது. நான் மந்திரவாதியா இல்லையா என்று! அதை எப்படிக் கேட்டாள் என்று நினைக்கிறீர்கள்? 'நீ நீதானா?' என்று கேட்டாள்!" என்று சொல்லி மறுபடியும் சிரித்தான்.

நந்தினி புன்னகை புரிந்தாள். வந்தியத்தேவனுடைய கண் முன்னால் ஒரு மின்னல் மின்னியது. அது தேனைச் சொரிந்தது.

"இவளுக்கு அப்படித்தான் ஏதாவது சந்தேகம் திடீர் திடீர் என்று வந்துவிடும். வாசுகி! ஏன் இங்கேயே மரம்போல் நிற்கிறாய்? உன் இடத்துக்குப் போ. யாராவது வரும் காலடிச் சத்தம் கேட்டால் கதவைப் படீரென்று சாத்து என்றாள் நந்தினி.

"இதோ, அம்மா!" என்று சொல்லிவிட்டு, வாசுகி லதா மண்டபத்தின் உள் வழியாகப் பிரகாச மாளிகைக்குச் சென்ற நடைபாதையில் நடந்து போய்ச் சற்றுத் தூரத்தில் மங்கலாகத் தெரிந்த வாசற்படியாண்டை உட்கார்ந்து கொண்டாள்.

நந்தினி சிறிது குரலைத் தாழ்த்திக் கொண்டு, "உன்னை மந்திரவாதியில்லையென்றா இவள் சந்தேகிக்கிறாள்? அசட்டுப் பெண். மந்திரவாதிகள் என்று சொல்லிக் கொள்கிறவர்களில் முக்கால்வாசிப் பேர் வெறும் பொய்யர்கள். நீதான் உண்மை மந்திரவாதி. என்ன மாய மந்திரம் செய்து இந்தச் சமயத்தில் இங்கே வந்தாய்?" என்று கேட்டாள்.

"அம்மணி! மாயமந்திரம் செய்து நான் இங்கு வரவில்லை. சுவர் மீது சாத்தியிருந்த ஏணி மேல் ஏறித்தான் வந்தேன்" என்றான் வந்தியத்தேவன்.

"அதுதான் தெரிகிறதே! இந்தப் பெண்ணை என்ன மாயமந்திரம் செய்து ஏமாற்றினாய் என்று கேட்டேன்."

"நிலா வெளிச்சத்தில் ஒரு புன்னகை புரிந்தேன். அவ்வளவுதான். அதற்குச் சரிப்பட்டு வராவிட்டால் தாங்கள் கொடுத்த மந்திர மோதிரத்தைக் காட்ட எண்ணியிருந்தேன்."

"அதைப் பத்திரமாய் வைத்திருக்கிறாய் அல்லவா? அந்த மோதிரம் இருக்கும்போது பட்டப்பகலில் பகிரங்கமாக இங்கே வந்திருக்கலாமே? எதற்காக இந்தக் குருட்டு வழியில் திருட்டுத்தனமாக வந்தாய்?"

"அம்மணி! தங்கள் மைத்துனர் இருக்கிறாரே, சின்னப் பழுவேட்டரையர், அவருடைய ஆட்கள் சுத்தத் திருடர்கள். முதலில் என்னுடைய உடைகளையும் உடைமைகளையும் திருடப் பார்த்தார்கள். பிறகு என்னைப் பின்தொடர்ந்து ஒரு கணம் கூடப் பிரியாமல் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களிடமிருந்து பிரிய பட்டபாடு பெரும்பாடாகப் போயிற்று. பிரிந்த பிறகு சந்து பொந்துகளில் புகுந்து தங்களுடைய மாளிகை மதில் சுவரைச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் சுவர் மேல் வைத்த ஏணியைப் பார்த்ததும் தாங்கள் தான் இந்த ஏழையை நினைவுகூர்ந்து இந்த ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்று எண்ணிவிட்டேன். அது தவறு என்று தெரிந்து கொண்டேன். மன்னிக்க வேண்டும்." "மன்னிப்பதற்கு அவசியம் ஒன்றும் ஏற்படவில்லையே!" "அது எப்படி, அம்மணி?"

"நீ நினைத்தது அவ்வளவாகத் தவறும் இல்லை. மந்திரவாதியை எதற்காக நான் தருவிக்க நினைத்தேன், தெரியுமா?" "தெரியவில்லை அம்மணி! எனக்கு மந்திரமும் தெரியாது. ஜோசியமும் தெரியாது."

"உன்னை நேற்றுக் காலையில் பார்த்தது முதலாவது உன்னுடைய ஞாபகமாகவே இருந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்



(நேற்றைய தொடர்ச்சி...)

## மந்திர புல்லாங்குழல்



நீண்ட வெண்ணிறத் தாடி, தலையில் கூம்பு வடிவில் தொப்பி. "அய்யா, பெரியவரே! என்ன ஆச்சு, ஏன் மயங்கி கிடக்கிறீங்க"

"தம்பி, என்னை காப்பாற்றியதற்கு நன்றி. நான் பசியாலும் பட்டினியாலும் வாடுகிறேன். எனக்கு உன்னால் முடிந்த உதவியை செய்வாயாக"

"அய்யா, நான் கஷ்டப்பட்டு சம்பாதித்த வருமானம் இதோ இருக்குது. இதில் 2 செப்பு காசுகள் நீங்க வைத்துக் கொள்ளுங்க"

'தம்பி! உன் இரக்க குணம் என்னை மகிழ்ச்சி கொள்ளச் செய்யுது. கை மாறாக நான் உனக்கு உதவ இருக்கிறேன். எனக்கு சில மந்திர சக்திகள் இருக்குது. அதனை பயன்படுத்த மற்றவர்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறேன். உனக்கு என்ன வேண்டும் கேள் தருகிறேன்."

அழகேசனுக்கு ஆச்சரியம். நம்பமுடியவில்லை. என்னடா இது, நாம இவருக்கு உதவினால் அவர் நமக்கு உதவுகிறாராம். அதுவும் மந்திரசக்தியால் புரியவில்லையே என்று திகைத்தார்.

"தம்பி, சந்தேகம் வேண்டாம். உனக்கு உதவி செய்ய இருக்கிறேன். என்ன வேண்டும் கேள்"

"அய்யா, எனக்கு இசையில் மிக்க ஆர்வம் உண்டு. நான் ஊதினால் இனிமையான இசை வரக்கூடிய ஒரு புல்லாங்குழல் கொடுங்க. அதை கேட்டவர்களும் மெய்மறந்து போகும் அளவுக்கு இருக்க வேண்டும்."

உடனே குள்ள மனிதர் கண்ணை மூடி ஏதோ மந்திரம் சொல்ல, கையில் அழகான புல்லாங்குழல் வந்தது. அதை அழகேசனுக்கு கொடுத்து, ஆசீர்வாதம் செய்து, வேறு வழியில் சென்று விட்டார்.

அழகேசனும் மகிழ்ச்சியாக நடக்கத் தொடங்கினார். திடீரென்று அவர் முன்னால் பெரிய கத்தியோடு அந்த திருடன் வந்து நின்றான். மரியாதையாக உங்க முதலாளி கொடுத்த காசுகளை எனக்கு கொடு என்றான். அழகேசனுக்கு பயம். ஏன் வீணாக திருடனிடம் சண்டை போட்டு, உயிரை இழக்க வேண்டும் என்று நினைத்து, பையில் இருந்த 3 செப்புக் காசுகளை கொடுத்தான்.

என்ன 3 செப்புக் காசா, அவர் 5 அல்லவா கொடுத்தார. தங்கம் கிடையாதா, கஞ்சப்பயல். ஆமாம் மீதி 2 காசு எங்கே? அதையும்கொடு. இல்லை என்றால் கொன்று விடுவேன்"

"என்னிடம் 3 தான் இருக்குது. 2 ஒரு குள்ள மனிதருக்கு கொடுத்து விட்டேன்" "நான், நம்ப மாட்டேன், எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்?"

அழகேசன் என்ன செய்வது என்று யோசித்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சமயங்களுக்கும் நோக்கம் ஒன்று தான்.விலக்க முடியாததை ஏற்றுக்கொள்ளச் செய்வதே அந்த நோக்கம் . ~ கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம்

உன்னையே நீ அறிவாய் என்கிறார் கிரேக்கத் தத்துவஞானி சோக்கிரட்டீஸ்.

முதலில் என்னை நான் அறிந்தாக வேண்டும். என்னை நான் அறியாமல் யாரை அறிந்தும் எதுவும் ஆக மாட்டாது.

அந்தவகையில், நம் மண்ணில் இன்றிருக்கக்கூடிய ஒரு பெரும் பிரச்சினையாக மதமாற்றம் அமைகிறது.

இவ்வாறு திட்டமிட்டு நடைபெறுகின்ற மத மாற்றத்தால், சைவ மக்கள் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர்.

அதிலும் சைவ சமயத்திலிருந்து மதம் மாறியவர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு கூலி கொடுத்து அவர்கள் மூலமாக மதம் மாற்றுகின்ற கொடுமை நடப்பது கண்டு சைவ சமயத்தவர்கள் மனம் நொந்து போயுள்ளனர்.

காலத்தால் தொன்மைமிகுந்ததும் எல்லாச் சமயங்களையும் போற்றுகின்றதுமான சைவ சமயத்துக்கு இப்படியொரு நிந்தை நடக்கிறதே என்ற மனத்துன்பத்துக்கு ஆளாகியுள்ள சைவ மக்களின் நிலைமையை கத்தோலிக்க சகோதரர்கள் நிச்சயம் புரிந்து கொள்வர்.

அதேநேரம் மதமாற்றம் தொடர்பில் சைவ சமயத்தவர்கள் ஆராய வேண்டும்.

நீண்ட நெடுங்காலமாக - பரம்பரை பரம்பரையாக - தாய்ச் சமயமாக அமைந்த சைவ சமயத்திலிருந்து எடுத்த எடுப்பில் மதம் மாறுகின்றனர் எனும்போது மதம் மாற்றுகின்றவர்கள் சம்பந்தப்பட்டவர்களை எவ்வாறு மூலைச்சலவை செய்கின்றனர்.

அவர்கள் எவ்வாறு அணுகுகின்றனர். அத்தகைய அணுகுமுறை எங்களிடம் உண்டா? எங்கள் சிவாச்சாரியர்களிடம் உண்டா? என்ற கேள்விகளை நாம் கேட்டே ஆக வேண்டும்.

அவ்வாறான கேள்விகளை எமக்குள் கேட்கும்போது, கடவுள் சந்நிதி அனைவருக்கும் சமமானது என்ற பொதுமையை நாம் பின்பற்றுகின்றோமா? அல்லது வர்ணாச்சிரம தர்மத்துக்குள் நின்று எங்களை நாங்களே இழக்கப் போகின்றோமா என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும்.

ஆகையால் சைவாலய அறங்காவலர்களே! சிவாச்சாரியப் பெருமக்களே! அனைவரும் ஆலயப் பிரவேசம் செய்வதற்கு எங்கேனும் தடை இருந்தால், அதனை உடைத்தெறியுங்கள்.

எத்தனையோ ஆலயங்கள் சமத்துவத்தை - பொதுவுடைமையப் பின்பற்றும் போது; ஒரு சில ஆலயங்கள் மட்டும் மனித சமூகத்தை நிந்திக்க நினைப்பது எந்தவகையில் நியாயமாகும்.

ஆகையால் வரட்டுத்தனங்களை தீயிட்டு எரித்துவிட்டு, அடியார்க்கும் அடியேன் என்ற உன்னதமான சைவத் தத்துவத்தின் வழி நின்று ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை உடனடியாக அமுல்படுத்துவோம்.

இதை நாம் செய்யும்போது உன்ன்னையே நீ அறிவாய் என்ற உயரிய தத்துவம் உயர்ந்த

# ராஜபக்ஷக்களை அதிகாரத்திலிருந்து நீக்கியது மூன்றாம் தரப்பின் சதிச்செயல்

## நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷக்களை அதிகாரத்திலிருந்து நீக்கியது மூன்றாம் தரப்பின் சதிச் செயல் என்று பாராளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு நபரும் மூன்றாம் தரப்பு சதியாளர்களின் கைக்கூலிகள். இதைப் பற்றி மக்கள் பின்னர் விளங்கிக் கொள்வார்கள் என முகப்புத்தகத்தில் நடைபெற்ற நேரடிக் கலந்துரையாடல் ஒன்றில் பேசிய போது நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

"இப்போதும் எங்களுக்கு போராட்டத்தைப் பற்றி எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பிரச்சினை உள்ளது. போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் மூன்றாம் தரப்பின் ஆட்கள் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். போராட்ட காலத்தில் மூன்றாம் தரப்பின் கைக் கூலியாக இருந்தீர்கள் என்பதை நீங்கள் பின்பு புரிந்து கொள்வீர்கள்" என அவர் மேலும் தெரிவித்தார்.கோ ஹோம் கோட்டா என்று நீங்கள் கூறும்போது பிரதமர், ஜனாதிபதி பதவிக்காக வரிசையில் நிற்கிறார். அதனால் தான் கோட்டாபய பதவி விலகும் முன்னர் மஹிந்த பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை தோன்றியது. போராட்டத்தை முன்னின்று நடாத்தியவர்கள் கட்சி சார்பற்றவர்கள் இல்லை. கோட்டாபய பதவி விலகும் போது பிரதமராக இருந்த மகிந்த அடுத்த படியாக ஜனாதிபதியாகுவார் என்பதில் அவர்கள் தெளிவாக இருந்தனர். அதனால் தான் அவர்கள் தந்திரமாக முதலில் மகிந்த ராஜபக்ஷவை பதவி விலக் கினார்கள் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-7, 9)

# மருந்துத் தட்டுப்பாடு இரு மாதத்தில் நிவர்த்தி

## சுகாதார அமைச்சர்

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் மருந்து தட்டுப்பாட்டை முழுமையாக நிவர்த்தி செய்வதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். கண்டி-பல்லேகலையில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.அத்துடன், நியாயமான விலைக்கு மருந்துகளை விற்பனைசெய்யும் நடவடிக்கைக்கும் செல்ல வேண்டும். இதே வேளை, மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கி, அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற செயற்படும் சில தொழிற்சங்க செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த, 90 சதவீதமானோர் ஒத்துழைப்பு வழங்குவதை, சமூக ஊடகங்கள் வாயிலாக தாம் பார்ப்பதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல்ல தெரிவித்துள்ளார்.(ம-7,9)

# பெண்களின் நிலை குறித்த ஐ.நாவின் ஆணைக்குழுவில் இலங்கையும் தெரிவு

பெண்களின் நிலை குறித்த ஐக்கிய நாடுகளின் ஆணைக் குழுவுக்கு இலங்கை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.கடந்த 5ஆம் திகதி.நியூயோர்க்கில் இடம்பெற்ற, ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக சபையின் கூட்டத்தில், 2024 முதல் 2028 வரையான நான்கு ஆண்டுகளுக்காக இலங்கை தெரிவாகியுள்ளதென வெளிவிவகார அமைச்சு, அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது. பங்களாதேஷ், பெல்ஜியம், பொலிவியா, கொலம்பியா, ரூமேனியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளும், இந்த ஆணைக்குழுவிற்கு தெரிவாகியுள்ளன.

தேசிய மட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடுகளைஅகற்றுவதற்கான அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், இலங்கை சார்பில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.1981 இல் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மாநாட்டை இலங்கை அங்கீகரித்துள்ளது.1946 இல் நிறுவப்பட்ட பெண்களின் நிலை குறித்த ஐக்கிய நாடுகளின் ஆணைக் குழு, 45 உறுப்பு நாடுகளை உள்ளடக்கியது. உலகளாவிய நிகழ்ச்சி நிரலில், முக்கிய பாலின சமத்துவப் பிரச்சினைகள் தொடர்பிலும், தேசிய அளவில் நடவடிக்கை மற்றும் செயல்படுத்தலை ஊக்குவிக்கவும், இந்த ஆணைக்குழு செயற்படுகிறது.அத்துடன், நிலையான வளர்ச்சிக்கான 2030 இன் நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துவதற்கும் பெண்களின் நிலை குறித்த ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழு பங்களிக்கிறது. (ம-7,9)

# மாட்டு வண்டிகளை மோதிய தனியார் பஸ்

## குழந்தை உட்பட நால்வர் காயம்

அனுராதபுரம் தந்திரிமலை ஏரிக்கரையில் நேற்று தனியார் பஸ் ஒன்று ஐந்து மாட்டுவண்டிகளுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் நால்வர் காயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் ஒரு சிறு குழந்தையும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரிலிருந்து புத்தளம் நோக்கி இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பயணித்த தனியார் பஸ் ஒன்று மடு நோக்கிச் சென்று கொண்டிருந்த 5 மாட்டுவண்டிகளுடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் நான்கு மாடுகளும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பஸ் சாரதியின் கவனயீனம் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடிப்பு

## வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் பதவிக்காலத்தை மூன்று மாத காலத்திற்கு நீடிப்பதற்கான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.வர்த்தமானி அறிவித்தலின்படி, ஜனாதிபதி, அரசியலமைப்பின் 41C.(1) மற்றும் 61E.(b) ஆகியவற்றின் அடிப்படையில், சி.டி.விக்கிரமரத்னவை பொலிஸ்மா அதிபராக, மார்ச் 26, 2023 முதல் மூன்று மாத காலத்திற்கு நியமித்துள்ளார். (ம-7,9)

# யாழ் .சிறைச்சாலையில் சிறைச்சாலை நூலகம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

"ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன" எனும் கூற்றுக்கு அமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகம் இன்று 8-ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. (4-6)

# வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகிஅம்மன் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 1 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும். இவ் உற்சவ காலத்தில் இன்று சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் மண்டைதீவு மகா வித்தியாலயத்திற்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட சுற்றுமதில் கையளிப்பு நிகழ்வு கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்றது. கலாநிதி .செ.சேதுராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வடக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கையளிப்புச் செய்ததுடன் மாணவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றது.

# மோல்டா கடற்கரையில் இலங்கையர் உட்பட 400 அகதிகள் மீட்பு



(மோல்டோ)

மோல்டா கடற்கரையில் ஆபத்தான நிலையில் காணப்பட்ட படகுகளில் இருந்து இலங்கையர்கள் உட்பட 400. சட்ட விரோத குடியேற்றவாசிகள் மீட்கப்பட்டுள்ளனர். எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பே இவர்களை காப்பாற்றியுள்ளது.

மீன்பிடி படகுகளில் பல மணி நேரமாக தத்தளித்துக்கொண்டிருந்த நில்லயில் இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

காப்பாற்றப்பட்டவர்கள் இத்தாலிக்கு அனுப்பப்படுவார்கள் என எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. மோசமான கால நிலை காரணமாக முதலில் அவர்கள்ள மீட்பதற்கு மிகுந்த சிரமப்பட்டோம் என எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இரண்டு நாட்களிற்கு முன்னர் குடியேற்றவாசிகளின் படகு ஆபத்தான நிலையில் காணப்படுவதாக தங்களிற்கு தகவல் கிடைத்தது என எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. (4)

# உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்துவதற்கு உதவுங்கள்

## சீனாவிடம் பிரான்ஸ் கோரிக்கை



(பாரிஸ்)

உக்ரைனில் ரஷ்யாவின் போரை நிறுத்த உதவுமாறு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், சீன ஜனாதிபதி ஸிஜின்பிங்கை வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவை அதன் நினைவுக்கு கொண்டு வரவும், அனைவரையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வரவும் உங்களை நம்ப முடியுமென பிரான்ஸ் ஜனாதிபதி சீன ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

உலக அமைதியைப் பாதுகாக்கும் திறன் மற்றும் பொறுப்பு சீனாவுக்கும் பிரான்ஸுக்கும் இருப்பதாக ஸிஜின்பிங் கூறியுள்ளார்.

ஆனால் இதுவரை அமைதியான தீர்வுக்கான வாய்ப்புகள் இல்லை என்றும் அதன் தாக்குதல் தொடரும் என்றும் ரஷ்யா பதிலளித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைக் கண்டிக்க மறுத்த மேற்கத்தேய நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் பல ஆண்டுகளாக மோசமடைந்து வரும் நிலையில், மக்ரோனின் சீனாவுக்கான அரசுமுறைப் பயணம் அமைந்துள்ளது.

மக்ரோனும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்த முயல்கிறார். அவருடன் ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயனும் இணைந்துள்ளார். அவர் சீனத் தலைமையுடனும் ஒரு பெரிய வணிகக் குழுவுடனும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க அழைத்தார். (4)

# உயிருக்கு பயந்து இரகசிய ரயில் பயணம் செய்யும் புடின்



(மொஸ்கோ)

உக்ரைன் மீது ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்தி ஒரு ஆண்டுகளை தாண்டி விட்டது. இந்த போரால் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமின் புடினின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு உள்ளது. இதனால் அவர் தற்போது உயிருக்குபயந்து இர்கசிய வாழ்க்கை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

தான் கொல்லப்படலாம் என்ற அச்சத்தில் அவர் தற்போது பல்வேறு பாதுகர்ப்பு நடவடிக்கைளை மேற்கொண்டு உள்ளார். தான் செல்லும் பாதை தெரியாத அளவுக்கு புடினின் உயிருக்கு ஆபத்து இருப்பதால் ரகசிய ரயில் பயணம் செய்து வருவதாக பாதுகாப்பு உயர் அதிகாரி க்ளெவ் கரகுலேவ் தெரிவித்து உள்ளார். விமானத்தை விட பாதுகாப்பு அதிகம் என்பதால் சிறப்பு கவச ரயிலில் அவர் பயணம் செய்து வருவதாக கூறப்படுகிறது.

இதுவரை 180 இற்கும் மேற்பட்ட பயணங்களை அவர் மேற்கொண்டதாக தெரிகிறது. புடின் பல இடங்களில் ஒரே மாதிரியான அலுவலகங்களை அமைத்து உள்ளார். தான் இருக்கும் இடம் எதிரிகளுக்குத் தெரியாமல் இருக்க அவர் பெரும்பாலும் மொபைல் போன்கள் பயன் படுத்துவதை தவிர்த்து விடுகிறார். செல்போனை பயன்படுத்தினால் அவர் இருக்கும் இடம் எளிதாக தெரிந்து விடும் என்பதால் புடின் அதனை பயன்படுத்துவது இல்லை. பல நேரங்களில் அவர் தன்னை தனிமைப்டுத்திக் கொள்கிறார்.

அவர் எங்கு பயணம் சென்றாலும் அவருடன் பாதுகாவலர்கள், உணவு பரிசோதகர்கள் மற்றும் என்ஜீனியர்கள் உடன் செல்கிறார்கள். தனக்கு நெருங்கியவர்களுடன் மட்டும் தான் அவ்வப்போது தொடர்பில் இருந்து வருவதாக கூறப்படுகிறது. எங்கள் ஜனாதிபதி போர் குற்றவாளியாகி விட்டார்.

இதனால் பெரும்பாலான நேரத்தை கஜகஸ்தானில் உள்ள ரஷ்ய தூதரகத்தில் பாதுகாப்பான தகவல் தொடர்பு வசதிக [illegible] தெரிவித்து உள்ளார். (4)

# பாலஸ்தீனிய போராளிக் குழுவை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல்



(இஸ்ரேல்)

லெபனானுக்குள்ளும், காஸா பகுதியிலும் பாலஸ்தீனிய போராளிக் குழுவான ஹமாஸுடன் தொடர்புடைய இலக்குகளைத் தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, தெற்கு லெபனானில் ஹமாஸின் பயங்கரவாத உட்கட்டமைப்பு தாக்கப்பட்டதாக, இஸ்ரேல் பாதுகாப்புப் படை குறிப்பிட்டுள்ளது.

இந்த வார தொடக்கத்தில் ஜெருசலேமின் அல்-அக்ஸா மசூதியை இஸ்ரேலிய பொலிஸார் தொர்டர்ச்சியாக இரவுகளில் சோதனையிட்டதை அடுத்து இரு தரப்புக்கும் இடையே பதற்றம் அதிகரித்தது.

இந்த மசூதி இஸ்லாத்தின் மூன்றாவது புனித மான தலமாகும். மேலும் இஸ்ரேலிய தாக்குதல்கள் பாலஸ்தீனியர்களுடன் வன்முறை மோதல்களைத் தூண்டியது மற்றும் பரந்த பிராந்தியத்தில் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்...

முன்னெடுக்கப்பட்டு வருகின்ற திருத்தப்பணிகளால், ஜனவரி 5ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டை - காங்கேசன்துறைக்கு இடையிலான நேரடி ரயில் சேவை அநுராதபுரம் ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டது.

எனினும், வவுனியா முதல் காங்கேசன்துறை வரையிலான யாழ். ராணி ரயில் சேவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், மார்ச் 27ஆம் திகதி முதல் அது ஓமந்தை வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் முன்னெடுக்கப்படும் திருத்தப் பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர் அநுராதபுரம் முதல் காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவை ஜூலை மாதமளவில் முன்னெடுக்கப்படும் என ரயில்வே பிரதி பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

எனினும், அநுராதபுரத்தில் இருந்து மஹவ சந்தி வரையிலான ரயில் மார்க்கத்தில் மற்றுமொரு திருத்தப் பணி ஜூலை மாதம் தொட்க்கம் டிசம்பர் மாதம் வரை முன்னெடுக்கப்படவுள்ளதால், ஜனவரி மாதத்திலேயே கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை நேரடி ரயில் சேவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என ரயில்வே பிரதி பொது முகாமையாளர் சுட்டிக் காட்டினார். (ம-7,9)

## பால் தேநீர்...

யாழ்.வணிகர் கழகத்தில் நேற்று மாலை உணவக உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உணவு நிலையங்களுக்கு ஏற்ப விலைகளில் வேறுபாடு காணப்படுவதால் அந்தந்த விலைகளில் இருந்து 10 ரூபாய் குறைத்து விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதுவருடத்துக்கு பின்னர் உணவுப் பொதிகள், வேறு உணவுப்பண்டங்கள் தொடர்பான விலைகள் தொடர்பாக முடிவெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (ம-7,9,33,104)

## குளிரூட்டி...

சென்று பார்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் பாடசாலை ஒன்றில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள சில பாடசாலைகளைப் பார்த்தால் இடிந்து விழும் கட்டடங்களைத்தான் காண முடிகிறது. இவ்வாறான கஷ்டப் பாடசாலைகளுக்கு சில கிலோமீற்றர் தூரத்தில் சர்வதேச விமான நிலையங்கள் கூட நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச விமான நிலையங்களை நிர்மாணிப்பதற்கான பணத்தில் ஒரு சிறு பகுதியை ஒதுக்கி நாட்டின் கல்வியை அபிவிருத்தி செய்திருந்தால் எமது நாடு இன்று உலகில் குறிப்பிடத்தக்க இடத்தில் இருக்கும் நாடாக முன்னேறியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-7,9)

## உடுவிலில்...

29 வயதுடைய நபர் ஒருவரிடம் இருந்து 36 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு குறித்த நபர் நீண்டகாலமாக போதை மாத்திரை விற்பனையிலும் ஈடுபட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,9,33)

## பிள்ளையார்...

திருகோணமலை - மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் 64ஆம் கட்டையிலுள்ள மலையடியில் 200 வருட பழைமையான பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.

இந்த ஆலயப் பகுதிக்கு கடந்த 2021 டிசம்பர் மாதம் பிக்குகள் குழு ஒன்று இரவு வேளை சென்றிருந்தது. அங்கு புத்தர் சிலை ஒன்றை அவர்கள் வைத்துச் சென்றனர்.

மறுநாள் காலை இதை அவதானித்த அப்பகுதி மக்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். இதையடுத்து, பொலிஸாரின் தலையீட்டில் அங்கிருந்து புத்தர் சிலை அகற்றப்பட்டது.

எனினும், சில நாட்களின் பின்னர் மக்களின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஆலயத்தை அண்மித்து - ஆலய வளாகத்திலேயே மீண்டும் புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டது. இதைத் தொடர்ந்து மலைப்பகுதியில் "கெட்டியாராமை சிறீ பத்ர தாது ரஜ மகா விகாரை" க்கான நிர்மாணப் பணிகள் நடைபெற்றன.

இராணுவமும் கடற்படையும் இணைந்து இரவு - பகலாக இந்த விகாரையின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் இந்த விகாரையின் நிர்மாணப் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ளது.

இது தொடர்பில் மூதூர் இந்து மத குருமார் சங்கத் தலைவர் பாஸ்கர சர்மா தெரிவித்ததாவது,

200 வருடங்கள் பழைமையான் பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் மலையின் மீது பௌத்த விகாரை அமைத்து அங்கு கிரியை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது எமக்கு கடும் மனவேதனையைத் ஏற்படுத்தியுள்ளது. 200 வருட பழைமையான பிள்ளையார் ஆலயம் இருக்கும் இடத்தில் கட்டுமானங்கள் கட்ட தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது என்றார். (ம-7,9)

## கட்டணம்...

டண அதிகரிப்பினால் எரிசக்தி தேவை குறையும் பட்சத்தில் சராசரி மின் உற்பத்தி 40.5 ஜிகாவாட் மணிநேரமாகக் குறையும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, ஊடகங்கள் ஊகித்து வருவதற்கு மாறாக மின் சாரத் தேவைக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படவில்லை என அமைச்சர் தனது டுவிட்டரில் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## பயங்...

வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போதைய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கண்டனங்கள் எழுந்ததை தொடந்து அரசாங்கம் முன்னேற்றகரமான சட்டத்தை கொண்டு வருவதாக உறுதியளித்தது, ஆனால் இந்த பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு பதில் உத்தேச பயங்கரவாத தடைச் சட்டமும் பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணத்தை அதிகரித்துள்ளது. ஒன்றுகூடல் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றிற்கான உரிமைகளை கட்டுப்படுத்துகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (ம-7,9)

## 75 வருடங்...

லேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

'உலகிலுள்ள அநேகமான நாடுகளில் இந்த பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் பலமானதாகக் காணப்படுகின்றன.

அமெரிக்கா போன்ற நாடுகளில் கடுமையான சட்டங்கள் காணப்படுகின்றன. இலங்கையில், உண்மையாக பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது அமுலில் இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாகவே எமது நாடு 75 வருடங்களாக முன்னோக்கி பயணிக்க முடியாதுள்ளது என்றார். (ம-7,9)

## மாற்றங்கள்...

இராஜாங்க அமைச்சர் ஷாந்த பண்டார தெரிவித்தார். (ம-7,9)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1538
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 5 2 2 5 2 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1113
L 04 18 24 43
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.04.07
சீட்டிழுப்பு இலக்கம் 3325
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
G 12 65 68 76
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 07/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1431
L 15 14 23 71 76

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.04.07
சீட்டிழுப்பு இலக்கம் 392
மகரம் 21 27 34 50 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/04/07
சீட்டிழுப்பு இலக்கம் 5083
0 0 6 4 1 7 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2058
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.04.07
தினம் வெள்ளிக்கிழமை
V 12 14 38 57
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,817,640/-
DLB www.dlb.lk

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.07
சீட்டிழுப்பு இல : 4219
ரூ. 3,950,020/-
22 23 30 52 T
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 310
சீட்டிழுப்பு 2023.04.07
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 12 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,916,360/-
DLB www.dlb.lk

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,576,764.60
திகதி 2023-04-07
வெற்றி வாரம் 3770
40 45 55 60
வர்ணம் கரும் நீலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,443,880/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 16 06 14 17 25
சீட்டிழுப்பு வாரம் 1234
திகதி 2023.04.07 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 319,912,999.40
DLB www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1884
சீட்டிழுப்பு திகதி : 2023.04.07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,342,420/-
35 46 48 59 U
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 02 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியிலிருந்து 500m தூரம்
- A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் காணி உள்ளது.

(15183)

**076 739 0413, 076 436 5814**


## சில பிளாஸ்டிக் பொருட்களை இறக்குமதி செய்யத் தடை

(கொழும்பு)

நாட்டில் ஜூன் முதலாம் திகதி முதல் சில பிளாஸ்டிக் பொருட்களை இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பிலான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள் போன்ற பல பொருட்கள் இதில் உள்ளடக்கப்படுள்ளன.(ம-7)


## புதிய கல்வியாண்டு - 2023

## வரலாறு ⇨ O/L - A/L

- வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
- பல வருட அனுபவமுடையவர்.
- ஒவ்வெரு மாணவனிடமும் தனிப்பட்ட கவனம்.
- மாணவர்களின் வசதிக்கேற்ப நேரசூசி வழங்கப்படும்.

(15141)

இடம் : 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
காலம் : 12.04.2023 (புதன்–4.00 பி.ப)

ஆசிரியர் - P.லக்ஷன்

மேலதிக விபரங்களுக்கு **077 482 5438**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**
**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15185)

**077 814 7389, 077 986 5457**


## லக்னோ வெற்றி



ஐதராபாத்துக்கு எதிரான போட்டியில்லக்னோ அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் ஆடிய ஐதராபாத் அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 121 ரன்கள் எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 5 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக குருணால் பாண்டியா தெரிவானார். (ம-7.9)


## வேலையாட்கள் தேவை

அனைத்து நாடுகளுக்குமான விசா மற்றும் விமான பயணச்சீட்டு சம்பந்தமான அனுபவம் உள்ளவர்கள் இன்று 8.4.2023 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00 வரையிலான காலப் பகுதிக்குள் தங்கள் சுய விபரக்கோவையுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

**AIRR Express & Travels**
இல.197, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சின்னக்கடை சந்தைக்கு அருகாமை)

(15163)

**077 266 6429, 021 221 0599**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை
  காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- **பார்வையிடும் நேரம் :**
  **காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15185)

**077 814 7389, 077 986 5457**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் 86 பரப்பு காணி விற்பனைக்குண்டு.(நெற்பரப்பு)

- கோப்பாய் தெற்கு இருபாலையில் கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு முன் அமைந்து காணப்படுகிறது.
- நன்னீரூற்று இடம்
- கடை, திருமண மண்டபம் கட்டுவதற்கு உகந்த இடம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15180)

**076 841 6574, 077 326 0502**



## ICT Individual and Batch Classes

ICT புதிய வகுப்புகள் தரம் 6 - 7 மற்றும் தரம் 10, 11 க்கான நேரடியான மற்றும் Online (physical and online) வகுப்புகள்.
நேரடியான வகுப்புகள் திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
Online வகுப்புகளில் கற்க விரும்புவோர் Phone மூலம் விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
வகுப்புகள் தமிழ், ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படும்.

**V.V.MoorThy (IT)**

**077 746 9282**

(15184)



## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(15165)

**076 342 4705**



## மினி சுப்பர் மாக்கெற்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை

- முகாமையாளர்
- விற்பனையாளர்

(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.)

(15179)

**077 809 1094**



## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் (நிலப்பரப்பு) 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பரப்பின் விலை (125,000/=) ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து 1½ km தூரம்.
- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி

(15183)

**076 755 8606**
**077 638 5683**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை

(15183)

**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-

கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

(C-6318)

0777-068-777
v2vacancies@gmail.com



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6318)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.